பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 11 2024 7 15
செவ்வாய்கிழமை இரவு

தலைப்புச் செய்திகள் -

1. சூரியனின் கரோனா பகுதியை ஆய்வு செய்யும் ஐரோப்பிய விண்வெளி முகமையின் ப்ரோபா-மூன்று விண்வெளித் திட்டத்தை இஸ்ரோ செயல்படுத்தும் என்று மத்திய அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் கூறியுள்ளார்.
2. கனடாவில் இந்து கோவில்கள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்த இந்தியாவின் கவலையை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் ஆஸ்திரேலியாவிடம் பகிர்ந்து கொண்டுள்ளார்.
3. மருத்துவத்துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் சிறப்பான பலன்களை அளிக்கும் என்று நித்தி ஆயோக் உறுப்பினர் டாக்டர் வி கே பால் தெரிவித்துள்ளார்.
4. அமெரிக்காவின் 47-வது அதிபரை தேர்வு செய்வதற்கான தேர்தல் தற்போது நடைபெற்று வருகிறது.
5. சென்னையில் இன்று தொடங்கிய சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டி வரும் 11-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**

ஐரோப்பிய விண்வெளி முகமையின் ப்ரோபா-மூன்று விண்வெளி திட்டம் இஸ்ரோ மூலம் மேற்கொள்ளப்படும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இந்திய விண்வெளி கருத்தரங்கின் மூன்றாவது கட்ட நிகழ்ச்சியில் பேசிய அவர், ப்ரோபா-மூன்று விண்வெளித் திட்டத்தின் மூலம் சூரியனின் காரோனாவுக்கு மிகவும் நெருங்கி உள்ள பகுதிகளை ஆய்வு செய்யப்படும் என்று கூறினார்.

உலகளாவிய விண்வெளி பொருளாதாரத்தில் இரண்டு சதவீத பங்களிப்பை கொண்டுள்ள இந்தியா, இன்னும் சில ஆண்டுகளில் பத்து சதவீதமாக உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவீத்தார்.

**[]<<<>>>[]**

சாத் பண்டிகையின் ஒரு முக்கிய நிகழ்வான நாகை-காய் கொண்டாட்டத்தையொட்டி பிரதமர் திரு நரேந்திரமோடி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், விரதத்தை கடைபிடித்த அனைத்து மக்களுக்கும் தமது சிறப்பான வாழ்த்துக்களை தெரிவிப்பதாகக் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இம்மாதம் 25-ஆம் தேதி தொடங்குகிறது.

புதுதில்லியில் இதனை தெரிவித்துள்ள நாடாளுமன்ற விவகாரங்கள்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ, இந்த கூட்டத்தொடர் அடுத்த மாதம் 20-ஆம் தேதி வரை நடைபெறும் என்று கூறினார்.

நாட்டின் அரசியல் சாசன அமைப்பின் 75-வது ஆண்டு விழா நாடாளுமன்ற மைய மண்டபத்தில் அடுத்த மாதம் 26-ஆம் தேதி நடைபெறும் என்றும் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

பாரத் ப்ராண்ட் அரிசி மற்றும் கோதுமை விற்பனையின் இரண்டாவது கட்டத்தை மத்திய உணவு அமைச்சர் திரு பிரல்ஹத் ஜோஷி இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தரமாக கிடைக்கும் வகையிலும், விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கும் நோக்கிலும் இந்த திட்டத்தை மத்திய அரசு தொடங்கி உள்ளது.

பாரத் ப்ராண்ட் கோதுமை மாவு பாக்கெட் கிலோ 30 ரூபாய்க்கும், பாரத் ப்ராண்ட் அரிசி ஒரு கிலோ பாக்கெட் 34 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

நிகழ்ச்சியில் பேசிய மத்திய அமைச்சர் திரு பிரல்ஹத் ஜோஷி, ஏழை, எளிய மக்களின் நலனை கருத்தில் கொண்டு அரசு பல தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருவதாகக் கூறினார்.

பாரத் ப்ராண்ட் கோதுமை மாவு-ம், அரிசியும் அதிக அளவில் சந்தையில் குறைந்த விலையில் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவற்றின் வரத்தால் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை வெளிச்சந்தையில் கணிசமாக குறையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் பொதுமக்கள் பாரத் ப்ராண்ட் பொருட்களை பெற்றுக் கொள்ளலாம் என்றும் திரு பிரல்ஹத் ஜோஷி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் தண்ணீர் திருவிழாவை நாளை தொடங்கி 15 நாட்களுக்கு நடத்த நித்தி ஆயோக் ஏற்பாடு செய்துள்ளது.

கடந்த ஆண்டு பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையில் புதுதில்லியில் நடைபெற்ற மாநில தலைமைச் செயலாளர்கள் மாநாட்டில் அறிவித்த

நதி-உற்சவம் தொலைநோக்கு திட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில் தண்ணீர் திருவிழா கொண்டாடப்படுவதாக நித்தி ஆயோக் தெரிவித்துள்ளது.

நீர்நிலைகளை பாதுகாத்தல், சிக்கனமான தண்ணீர் பயன்பாடு உள்ளிட்ட முக்கிய விஷயங்களை மக்களிடையே எடுத்துச் செல்வதற்கான முயற்சிகள் இந்த 15 நாள் திருவிழாவில் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடெங்கிலும் உள்ள 20 முன்னோடி மாவட்டங்கள் மற்றும் தாலுகாக்களிலும் தண்ணீர் திருவிழா நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய ஜல்ஜீவன் இயக்கம், மத்திய நீர்வளத்துறை உள்ளிட்டவை இந்நிகழ்ச்சிகளில் தங்களது பங்களிப்பை செலுத்தவுள்ளன.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பொதுமக்கள் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள், பள்ளி மாணவ மாணவிகள் பங்கேற்கவுள்ளனர்.

**[]<<<>>>[]**

மருத்துவத்துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பல கோணங்களில் சிறப்பான பலன்களை அளிக்கும் என்று நித்தி ஆயோக் உறுப்பினர் டாக்டர் வி கே பால் தெரிவித்துள்ளார்.

இந்திய தொழில்கள் கூட்டமைப்பின் 18-வது மருத்துவ கருத்தரங்கில் உரையாற்றிய அவர், வளர்ந்த நாடுகளுக்கு இணையாக நாட்டில் மருத்துவ கட்டமைப்புகளும், சேவைகளும் மேம்படுத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார்.

நாட்டு மக்கள் ஆரோக்கியத்துடன் திடகாத்திரமாக இருந்தால்தான் பொருளாதாரம் உயர்நிலைக்குச் செல்லும் என்று அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய திரு வி கே பால், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் பல்வேறு புத்தாக்க தொழில்களை கொண்டு வருவதற்கு மத்திய அரசு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

புதிய தொழில்நுட்பங்களின் உற்பத்தி நாடாக இந்தியா திகழ வேண்டுமென்றும் திரு வி கே பால் கூறினார்.

[]<<<>>>[]

கனடாவில் இந்து கோவில்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மிகுந்த வேதனை அளிப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் ஆஸ்திரேலியாவிடம் தெரிவித்துள்ளார்.

அந்நாட்டு தலைநகர் கான்பராவில் ஆஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் திருமதி பென்னி வாங்-வுடன் செய்தியாளர்களை சந்தித்த திரு ஜெய்சங்கர், கனடா நாட்டு அரசியலில் வன்முறை சக்திகளுக்கும் இடமளிக்கப்பட்டிருப்பது வருந்தத்தக்கது என்று கூறினார்.

எந்த ஒரு குறிப்பிட்ட ஆதாரத்தையும் வெளிப்படுத்தாமல் குற்றம் சுமத்துவதை அந்நாடு வழக்கமாக கடைபிடித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கனடாவில் தங்கியுள்ள இந்திய தூதரக அதிகாரிகளை கண்காணிப்பது மற்றும் அவர்களின் காணொலி பதிவுகள் மற்றும் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்பது போன்றவற்றை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர் கூறினார்.

ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் திருமதி பென்னி வாங், கனடாவில் உள்ள இந்து கோவில்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் அங்குள்ள இந்திய வம்சாவளியினரின் மனதை மிகவும் பாதித்திருப்பதாகக் கூறினார்.

ஆஸ்திரேலியாவில் அனைவருடைய மத நம்பிக்கைகள், பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றுக்கு உரிய மரியாதை அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

தனியாரிடம் உள்ள அனைத்து வகையிலான சொத்துக்களையும் பொது பயன்பாட்டுக்காக அரசு கையகப்படுத்த முடியாது என்று உச்சநீதிமன்றம் இன்று தெளிவுபடுத்தியுள்ளது.

அரசியலமைப்புச் சட்டம் 39-பி பிரிவின் கீழ் சில வகையான இடங்களை உரிமையாளர்களுக்கு திருப்பித்தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தலைமை நீதிபதி திரு சந்திரசூட் தலைமையிலான ஒன்பது நீதிபதிகள் கொண்ட அமர்வு இதற்கான தீர்ப்பை வழங்கியுள்ளது.

[]<<<>>>[]

ஹரியானா மாநில 15-வது சட்டமன்றத்தின் முதல் கூட்டத்தொடர் இம்மாதம் 13-ஆம் தேதி தொடங்குகிறது.

சட்டப்பேரவைத் தலைவர் திரு ஹர்விந்தர் கல்யாண் செய்தியாளர்களிடம் பேசுகையில், இந்த கூட்டத்தொடரை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்,.

அவை நாளை காலை 11 மணிக்கு கூடியதும் அவை நடவடிக்கைகள் குறித்து சட்டமன்ற அலுவல் ஆய்வுக்குழு கூடி முடிவெடுக்கும் என்று அவர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

அமெரிக்காவின் 47-வது அதிபரை தேர்வு செய்வதற்கான தேர்தல் தற்போது நடைபெற்று வருகிறது.

குடியரசுக் கட்சி சார்பில் திரு டொனால்டு ட்ரம்பும், ஜனநாயகக் கட்சி சார்பில் திருமதி கமலா ஹாரீஸும் களத்தில் உள்ளனர்.

வெர்மாண்ட் மாகாணத்தில் வாக்குப்பதிவு தொடங்கிய சில மணி நேரத்தில் அமெரிக்காவின் அனைத்து மாகாணங்களிலும் வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது.

வாக்குப்பதிவு தொடங்குவதற்கு முன்பாக திரு டொனால்டு ட்டிரம்ப் மிச்சிகன் நகரில் மேற்கொண்ட பிரச்சாரத்தில் நாட்டின் எல்லையை பாதுகாப்பதில் முழுகவனம் செலுத்தப்போவதாகவும், பல ட்ரில்லியன் டாலர் அளவுக்கு வரிகளை குறைக்கப்போவதாகவும் அறிவித்தார்.

பென்சிலோனியாவில் தமது இறுதிக்கட்ட பிரச்சாரத்தை முடித்துக் கொண்ட திருமதி கமலா ஹாரிஸ், கருக்கலைப்புக்கான உரிமை, தொழிலாளர் குடும்பங்களுக்கு குறைந்த செலவில் உணவு மற்றும் வீட்டுவசதி போன்றவை செய்து தரப்படும் என்று உறுதியளித்தார்.

அமெரிக்க தேர்தல் முறைப்படி மொத்தம் உள்ள 538 எலெக்டோரல் காலேஜ் வாக்குகளில் 270 வாக்குகளுக்கு மேல் பெறுபவர் அமெரிக்க அதிபராக தேர்வு செய்யப்படுவார்.

புளோரிடா பல்கலைக்கழகத்தில் 82 மில்லியன் மக்கள் வாக்களித்துள்ளனர்.

இதுவரை அமெரிக்கா முழுவதும் 240 மில்லியன் பேர் வாக்களித்துள்ளனர்.

[]<<<>>>[]

தென்கொரியாவை ஒட்டியுள்ள கிழக்கு கடற்பகுதியில் வடகொரியா இன்று காலை ஏவுகணைகளை வீசி சோதனை நடத்தியுள்ளது.

இதனை தென்கொரிய ராணுவ அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

வடகொரியாவின் கிழக்கு மாகாணத்தில் உள்ள சாரிவான் பகுதியிலிருந்து இந்த ஏவுகணைகள் செலுத்தப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டி இன்று தொடங்கியது.

சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் இப்போட்டி வரும் 11-ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

மாஸ்டர்ஸ் பிரிவில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி, விதித் குஜராத்தி, தமிழகத்தைச் சேர்ந்த அரவிந்த் சிதம்பரம், உள்ளிட்ட எட்டு வீரர்களும், சேலஞ்சர்ஸ் பிரிவில் தமிழகத்தின் கார்த்திகேயன் முரளி, வைஷாலி, ப்ரணவ் வெங்கடேஷ், ப்ரணேஷ் முனிரத்னம் உள்ளிட்ட எட்டு பேரும் பங்கேற்கின்றனர்.

**[]<<<>>>[]**

பின்லாந்தில் நடைபெற்று வரும் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தை சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் நெடுஞ்செழியன் - பிரசாந்த் இணை தோல்வியடைந்தது.

**[]<<<>>>[]**